18th March 1959]

Sri N. K. Palanisami : ஜனங்களுக்கு அதிகப்படியான சம்பா கோதுமை தேவை இருப்பதன் காரணமாக, குறிப்பிட்ட அளவுக்காவது இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. Bhaktavatsalam : கோதுமையைப் பொறுத்த மட்டில் நியாய விலைக் கடைகளில் அது வினியோகிக்கப்பட்டுவருகிறது.

Sri S. Lazar : ரீடெயில் டிஸ்ட்ரிபூட்டர்களுக்கு இப்போது கோட்டா வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நகரங்களில் கொடுக்கிறபோது ஒரு சிலருக்குக் கொடுப்பதற்கு பதிலாக அதிகப்படியான ரீடெயில் டீலர் களுக்குக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. Bhaktavatsalam : எவ்வளவு கிடைக்கிறதோ அதை வைத்துக்கொண்டு தான் வினியோகிக்க வேண்டியிருக்கிறது. எந்த அளவுக்குச் சாத்தியப்படுமோ அந்த அளவுக்குச் செய்யப்பட்டு வருகிறது.

Forest survey

* 759 *Q.*—**Sri N. K. Palanisami** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Central Board of Forestry has recommended to this Government to conduct a survey of all forests in this State for obtaining full data of forest resources; and

(*b*) if so, the steps taken by the Government in the matter?

The Hon. Sri M. Bhaktavatsalam : (*a*) Yes, Sir.

(*b*) The Forest Utilization Officer collected details of timber and allied industries under the direction of the Chief Conservator of Forests.

Sri N. K. Palanisami : ஸார், கோயம்புத்தூரில் டிம்பர் அதிகம் கிடைப்பதால் அங்கே ஒரு பேப்பர் மில் ஏற்படுத்தலாம் என்று ஒரு ஜெர்மன் ஸ்பெஷலிஸ்ட் சிபார்சு செய்தார்களா ? அப்படியானால், இதை வைத்து அங்கே ஒரு பேப்பர் மில்லை ஏற்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri M. Bhaktavatsalam : நீலகிரியில் வாட்டில் மரம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு பேப்பர் மில் நடத்தலாம். அது கவனிக்கப்பட்டு வருகிறது. மற்ற டிம்பர்களெல்லாம் பேப்பருக்குத் தகுந்த டிம்பர் அல்ல. நீலகிரியில் உள்ள வாட்டில்தான் அதற்கு நல்லதாக இருக்கும். ஆகையால் அந்த வாட்டில் மரத்தை வைத்து காகித உற்பத்தி சாலை ஏற்படுத்துவது பற்றி யோசனை செய்யப்பட்டு வருகிறது.

Sri N. Marudachalam : ஸார், கோயம்புத்தூரிலே வெள்ளியங்கிரி மலைப் பகுதியில் மூங்கில் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் ஏதேனும் பேப்பர் தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?

The Hon. Sri M. Bhaktavatsalam : மூங்கில் எங்கெங்கே கிடைக்கிறதோ அதை வைத்து காகிதத் தொழிற்சாலை நடத்துவதுபற்றியும் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

Women welfare centres in Tirunelveli District

* 857 *Q.*—**Sri T. Veluchami** : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லாவில் தற்சமயம் எங்கெங்கே பெண்கள் நல சென்டர்கள் உள்ளன ?